## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2024ம் ஆண்டு மார்ச் மாதம் 07-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.460 /2019

வா.சா.1 வெங்கடேஸ்வரி

**இளவர் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்காக நீதிமன்ற காப்பாளர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இளவர் வாதிக்கு தாவா சொத்தில் 1/7 பாகம் உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சின்னபன்னாடி என்பவர் 42 வருடங்களுக்கு முன்பாக இறந்து விட்டார் என்பதற்கும், அவருக்கு எத்தனை பேர்கள் வாரிசுகள் என்பதற்குண்டான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சின்னபன்னாடியின் மகள் பர்வதம், பர்வதத்தின் மகள் பூமதி மற்றும் 1ம் பிரதிவாதி மகன் கார்த்திகேயன் ஆகியோர்களது இறப்பு மற்றும் வாரிசு விபரம் ஆகியவற்றை நான்தான் நிரூபணம் செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 4.11.2011 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் மற்றும் 23.9.2013 தேதியிட்ட கிரைய ஆவணங்களில் 4, 5 பிரதிவாதிகள் தரப்பினராக இல்லாததால் தாவா சொத்தில் உள்ள பங்கு உரிமையை பொறுத்து மேற்கண்ட 2 ஆவணங்களும் 4, 5 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி, 14ம் பிரதிவாதி கனரா வங்கியில் தாவா சொத்தின் ஒரு பகுதியை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளதை பொறுத்து 4,5 பிரதிவாதிகள் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி சுமதி என்பவர் தான் 4,5 பிரதிவாதிகளின் தாயார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி இளவர் 4,5 பிரதிவாதிகளின் பாதுகாவலராக செயல்படாத காரணத்தால் இளவர் 4,5 பிரதிவாதிகளின் நலனை அனுசரித்து இளவர் 4,5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் உள்ள பங்கு பாத்தியத்தை பொறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின்பேரில் எவ்வித வில்லங்கம் மேற்கொண்டாலும் அது இளவர் 4,5 பிரதிவாதிகளின் பங்கு பாத்தியத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இளவர் 4,5 பிரதிவாதிகள் தாவா சொத்தில்

அவர்களுக்கு உண்டாண பங்கு உரிமையை பெற உரிமை உடையவர்கள் என்றால் சரியல்ல.